18.01.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சிக்கிமில் இயற்கை விவசாய விழாவை இன்று தொடங்கி வைக்கிறார் பிரதமர்

இந்தியாவில் முதல் முறையாக இயற்கை விவசாயம் மேற்கொள்ளும் மாநிலமாக சிக்கிம் உருவெடுத்துள்ள நிலையில், அந்த மாநிலத்தில் நடைபெற உள்ள இயற்கை விவசாய விழாவை பிரதமர் நரேந்திர மோடி திங்கள்கிழமை (ஜன.18) தொடங்கி வைக்கிறார். சிக்கிம் தலைநகர் காங்டாக்கின் ரிட்ஜ் பார்க்கில் அமைக்கப்பட்டுள்ள இயற்கை விவசாயத் தோட்டத்தை பிரதமர் மோடி திங்கள்கிழமை பார்வையிடுகிறார்.

காங்கடாக்கை அடுத்த சாரம்சா பகுதியில் செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ள இயற்கை விவசாய விழாவில், இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட ஆரஞ்சுப் பழங்களால் வடிவமைக்கப்பட்ட ஹிந்துக் கடவுள் பிள்ளையார் மற்றும் வாழைப்பழங்களால் வடிவமைக்கப்பட்ட புத்தர் சிலை காட்சிக்கு வைக்கப்பட உள்ளன. சிக்கிம் மாநிலம் முழுவதிலும் இருந்து வருகை தரும் விவசாயிகள் 55 பேர், தங்களது இயற்கை விவசாய உற்பத்திப் பொருள்களை பிரதமர் மோடி காண்பதற்காக சாராம்சா நகரில் காட்சிக்கு வைக்க உள்ளனர்.

கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு முதல்வர் பவன் குமார் சாம்லிங் தலைமையிலான அரசு, சிக்கிம் மாநிலத்தை இயற்கை விவசாயத்துக்கு மாற்ற முடிவு செய்தது. அதையடுத்து, பூச்சிக்கொல்லி மருந்து, உரம் ஆகிய ரசாயனப் பொருள்களை விற்பனை செய்வதற்கும், அவற்றைப் பயன்படுத்துவதற்கும்தடைவிதிக்கப்பட்டது.

**மாணிக்கம்பாளையத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பு**

பவானியை அடுத்துள்ள மாணிக்கம்பாளையத்தில் தமிழக அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டது.

மேட்டூர் அணையின் மேற்குக் கரை வாய்க்கால் பாசனத்தில் தற்போது நெல் அறுவடை தீவிரமடைந்துள்ளது. இதையடுத்து, தமிழக அரசு நேரடியாக நெல் கொள்முதல் செய்யும் வகையில் நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் மாணிக்கம்பாளையத்தில் நெல் கொள்முதல் நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. மாணிக்கம்பாளையம் ஊராட்சித் தலைவர் எம்.பி.பாலசுப்பிரமணியம் முதல் விற்பனையைப் பதிவு செய்து நெல் கொள்முதலைத் தொடக்கிவைத்தார். தொடர்ந்து 3 மாதங்களுக்கு இயங்கும் இந்த மையத்தில் விவசாயிகள் நெல்லை விற்பனை செய்து நியாயமான விலை பெறலாம். இதில், பட்டியல் எழுத்தர் வரதராஜன் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

விவசாயிகள் கோரிக்கை:

நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு வங்கிக் கணக்கு மூலமாக பணம் வழங்கும் முறை நடைமுறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதனால், நெல் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு சிரமம் ஏற்படுகிறது.

வங்கிக் கணக்கு தொடங்க விவசாய நிலத்தின் ஆவணங்களை அளிக்க வேண்டும்.

குத்தகைக்கு விவசாயம் செய்யும் விவசாயிகள், உரிய ஆவணங்களை வழங்க முடியாது. எனவே, வழக்கமாக காலையில் நெல் விற்பனை செய்தால் மாலையில் பணத்தை நேரடியாக வழங்கும் நடைமுறையே

பின்பற்றப்பட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**களைகட்டும் கத்தரி சாகுபடியால்மகிழ்ச்சி:ஏக்கருக்கு ரூ.10,000 லாபம்**

தேனி:தேனி அருகே களை கட்டும் கத்தரி சாகுபடியால் மகிழ்ச்சியில் உள்ள விவசாயிகள், ஏக்கருக்கு ரூ. 10,000 வரை லாபம் சம்பாதித்து வருகின்றனர்.தேனி அருகே கொடுவிலார்பட்டி, நாகலாபுரம், ஸ்ரீ ரங்கபுரம், பி.சி., புரம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் 200 ஏக்கர் பரப்பளவில் மானாவாரியாக கத்தரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் தலா 2 முதல் 7 ஏக்கர் வரை இச்சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். ஆற்றுப்பாசனம் கிடையாது. கிணற்று பாசனம் மட்டுமே விவசாயிகளுக்கு கை கொடுத்து வருகிறது. தற்போது விளைச்சல் பருவம் எட்டியுள்ளதால், தினமும் கத்தரிக்காய் பறிப்பில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஏக்கருக்கு 10 மூடைகள் வீதம் மகசூல் கிடைத்து வருகிறது. களை எடுப்பு, மருந்து தெளிப்பு, பறிப்புக்கூலி உள்ளிட்ட பராமரிப்பு செலவு போக, ஏக்கருக்கு 10,000 ரூபாய் விவசாயிகளுக்கு லாபம் கிடைத்து வருகிறது.

விவசாயி வைரவன் கூறியதாவது: ஸ்ரீரங்கபுரத்தில் 7 ஏக்கரில் கத்தரி சாகுபடி செய்துள்ளேன். சமீபத்தில் பெய்த மழையால் அது நல்ல விளைச்சல் அடைந்துள்ளது. இங்கு விளையும் கத்தரி உள்ளூர் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கமிஷன் கடைக்காரர்கள் ஒரு சிலர் நேரடியாக கொள்முதல் செய்கின்றனர். 30 கிலோ ஒரு மூடை( சிப்பம்) ரூ.

2,000க்கு வாங்குகின்றனர். கார்த்திகை மாதம் முதல் கத்தரிக்கு நல்ல மசுவு ஏற்பட்டுள்ளதால், விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. கிலோ ரூ. 40க்கு விற்கிறோம். வரத்து அதிகரிப்பால் சில்லரை விற்பனைக்காக உள்ளூர் சந்தைக்கும் அனுப்பப்படுகிறது. விவசாய செலவுகள் போக, ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் லாபம் கிடைத்து வருகிறது, என்றார்.

**தென்னை மரங்கள் ஏற பெண்களுக்கு பயிற்சி:வழி காட்டும் விவசாய கல்லூரி**



மதுரை;மதுரை விவசாய கல்லூரி வேளாண் அறிவியல் மையத்தில் பெண்களுக்கு தென்னை மரங்கள் ஏறுவதற்கும், பிற இயந்திரங்களை கையாள்வதற்கும் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.'எர்கனோமிக்ஸ்' முறையில் கிராம பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்காக சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. நிலக்கடலையை செடி மற்றும் காய்களை தனியாக பிரிப்பது, மக்காச்சோள விதை பிரிப்பதற்கு ஒரு நாள் இயந்திர பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதுகுறித்து மையத்தின் உழவியல் துறை உதவி பேராசிரியர் பத்மநாபன் கூறியது: பெண்கள் கையாளும் வகையிலான கருவிகளுக்கு குழுவாகவும், தனியாகவும் பயிற்சி தருகிறோம். பாதுகாப்பான முறையில் தென்னை மரங்கள் ஏறுவதற்கு ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படும். இதன் மூலம் கிராமப் பெண்கள் அச்சமின்றி தென்னை மரம் ஏறலாம்.

விவசாயிகளுக்கு நேரடி நெல் விதைப்பு மற்றும் களை கருவி மற்றும் ஸ்பிரேயர் கையாளும் முறை ஒரு நாள் பயிற்சியாக தரப்படுகிறது. விவசாயிகள், படித்த இளைஞர்கள் குழுவாக வரலாம். மானாவாரியில் நிலக்கடலை, பருத்தி, மக்காச்சோளம் பயிர்களை விதைப்பதற்கும், களை எடுப்பதற்கும் சற்றே பெரிய கருவிகள் தேவைப்படும். இவற்றை இயக்குவதற்கு பயிற்சி தரப்படுகிறது. பயிற்சிக்கு பின் விவசாயப் பொறியியல் துறை மூலம் மானியத்தின் மூலம் கருவிகள் வாங்கவும் ஏற்பாடு செய்யப்படும். விவசாயிகள் இதன் மூலம் பயன்பெறலாம், என்றார். விபரங்களுக்கு: 97888 20438.

**எண்ணெய் வித்து பண்ணையில்வேர்க்கடலை நடவுக்கு ஆயத்தம்**

காஞ்சிபுரம்;நடப்பாண்டில் மழை பெய்துள்ளதால், முசரவாக்கம் அரசு எண்ணெய் வித்து பண்ணையில், விவசாயம் முழு வீச்சில் நடந்து வருகிறது.

காஞ்சிபுரம் அடுத்த, முசரவாக்கத்தில் அரசு எண்ணெய் வித்து பண்ணை இயங்கி வருகிறது. இந்த பண்ணை, 154 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதில், 147 ஏக்கர் பயிர் செய்யப்பட்டு வருகிறது.

சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததால், தண்ணீர் வசதி இல்லாமல் குறைந்த அளவு பயிர் செய்யப்பட்டது. இந்த ஆண்டு, எதிர்பார்ப்பை விட அதிக மழை பெய்துள்ளதால்ல விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் கிடைத்துள்ளது. இதனால் இந்த பருவத்தில் பயிர் செய்யும் பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

வேர்க்கடலை நடவுக்காக, நீர் தெளிப்பான் மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். இந்த பருவத்தில் உளுந்து, வேர்க்கடலை, கேழ்வரகு, எள், போன்றவையும், இயற்கை உரத்திற்காக தக்கை பூண்டையும் பயிர் செய்வதற்கான பணிகள் நடந்து வருகின்றன.

இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'இந்த ஆண்டு தண்ணீர் பிரச்னை இருக்காது. அதனால் வழக்கத்தை விட அதிக மகசூலை எதிர்பார்க்கிறோம்' என்றார்.

**ஏரியில் தண்ணீர் திறப்புநடவுப் பணி துவக்கம்**

வாலாஜாபாத்:கோவிந்தவாடி அகரம் ஏரியில், பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், நாற்று நடும் பணியில், விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.
காஞ்சிபுரம் அடுத்த, கோவிந்தவாடி அகரம் கிராமத்தில், பொதுப்பணி துறை ஏரி உள்ளது. இந்த ஏரி நீரை பயன்படுத்தி, 750 ஏக்கரில் விவசாயம் செய்யப்படுகிறது. வட கிழக்கு பருவ மழையால், ஏரி நிரம்பி இருப்பதால், விவசாயிகள் நெல் நாற்று நடும் பணிகளை துவக்க முடிவு செய்தனர். இந்நிலையில், கடந்த வாரம், ஏரியிலிருந்து பாசனத்திற்காக மதகு திறக்கப்பட்டு, நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதையடுத்து, தரிசாக இருந்த நிலங்களில், விவசாயிகள் உழவு செய்து, நாற்று நடும் பணியை துவக்கி உள்ளனர்.இதுகுறித்து, அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கூறுகையில், 'கடந்த, 15 ஆண்டுகளுக்கு பின், தரிசாக இருந்த நிலத்தை உழுதுள்ளோம். தற்போது ஏரியில் உள்ள தண்ணீரை பயன்படுத்தி, இரு போகம் பயிரிட முடியும்' என்றனர்.

**ஈரோடு மாவட்டத்தில் இயல்பை விட இந்தாண்டு அதிகளவில் மழை பதிவு**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் கடந்த, 2015ல் இயல்பை விட கூடுதலாக, 136 மி.மீ., மழை பதிவானது.

ஈரோடு மாவட்டம், மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலை இணையும் இடத்திலும், மழை மறைவு பிரதேசத்திலும் உள்ளதால், பருவமழை என்பது நம்பிக்கை இழந்த ஒன்றாகும். காற்றழுத்த மாற்றம், புயல், கோடை மழை போன்றவையே கைகொடுக்கும். இதனால், ஆண்டு சராசரி மழை, 717 செ.மீ., ஆகவே உள்ளது கடந்த, 2006ம் ஆண்டு- 704.1 மி.மீ., 2009ல்-649.68, 2012ல்-548.95, 2013ல்-542.09 என, சராசரியைவிட குறைந்த மழை பதிவானது. கடந்த, 2004 கால கட்டத்தில்-797.4, 2005ல்-855.6, 2007ல்-794.8, 2008ல்-762.94, 2010ல்-963.20, 2011ல்- 869.56, 2014ல்-764.21, 2015ல்- 852.97 மி.மீட்டர் மழை பதிவானது. கடந்த, 2015ல் நவ., மற்றும் டிச., மாதம் தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில், மிக அதிகளவில் மழை பதிவானது. குறிப்பாக, சென்னை, கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற, 15க்கும் மேற்பட்ட மாவட்டங்கள் மூழ்கும் நிலையில் மழை பெய்தபோதும், ஈரோடு மாவட்டத்தில், நவ., மாதம், 256.63 மீ.மீட்டர் மட்டுமே மழை பதிவானது. டிசம்பரிலோ, 18 மி.மீ., மட்டுமே பதிவானது. இருப்பினும், கடந்த, 2014ம் ஆண்டைவிட, 88.76 மி.மீ., கூடுதலாகவும், சராசரியைவிட, 135.97 மி.மீட்டரும் கூடுதல் மழை பதிவானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சத்தியமங்கலம்: கரிநாளை முன்னிட்டு, சத்தியமங்கலம் பகுதியில் நேற்று இறைச்சி மற்றும் மீன் கடைகளில் விற்பனை சூடுபிடித்தது. நேற்று முன்தினம் கடைகளுக்கு விடுமுறை என்பதால் அசைவ பிரியர்கள்,

நேற்று படையெடுத்தனர். ஆட்டிறைச்சி கிலோ, 400 ரூபாய்க்கும், கறிக்கோழி, 160 ரூபாய்க்கும், நாட்டுக்கோழி, 350 ரூபாய்க்கும், மீன் கிலோ, 150 ரூபாய்க்கும் விற்பனையானது. வடக்குபேட்டை பகுதியில் வான்கோழி விற்பனை விறுவிறுப்பாக நடந்தது. ஒரு கிலோ, 120 முதல், 160 ரூபாய் வரை விற்றது. மற்ற வகைகளைவிட விலை குறைவு என்பதால், மக்கள் வாங்கி சென்றனர்.

**தேயிலை செடிகளை பனியில் இருந்து பாதுகாக்க சருகுகளால் மூடும் பணி ஜரூர்**

கோத்தகிரி: கோத்தகிரியில் தேயிலை தோட்டங்களில் பனித்தாக்காத வகை யில், செடிகளின் மீது இலை சருகுகளை மூடும் பணி நடந்து வருகிறது.

கோத்தகிரியில், தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக நடந்து வருகிறது. செங்குத்தான பகுதிகள் தவிர, தாழ்வான பகுதிகளிலும் அதிக பரப்பளவில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. ஆண்டுதோறும், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில், இப்பகுதியில் பனிப்பொழிவு அதிகமாக இருக்கும்.

குறிப்பாக, தாழ்வான பகுதியில் கவாத்து வெட்டிய தோட்டங்கள் உட்பட, தேயிலை தோட்டங்கள் பனியால், கருகிவிடும் என்பதால், விவசாயிகள் இலை சருகுகள் மற்றும் தாகை உள்ளிட்ட

செடிகளை மூடி பாதுகாத்து வருகின்றனர். மலை மாவட்ட சிறுவிவசாயிகள் சங்க தலைவர் தும்பூர் போஜன் கூறுகையில்,“ தற்போது பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. இதனால், செடிகள் கருகி, விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்கவேண்டும்,” என்றார்.-

## இயற்கை வேளாண் பயிற்சி முகாம்

கோத்தகிரி: கோத்தகிரி கோடநாடு ஊராட்சிக்கு உட்பட்ட சுண்டட்டி கிராமம், 'சன்சத் ஆதர்ஸ் கிராம யோஜனா' திட்டத்தில், கேபாலா கிருஷ்ணன் எம்.பி.,யால், தத்தெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, தோட்டக்கலைத்துறை சார்பில், இயற்கை வேளாண்மை பயிற்சி, கிராமத்தில் நடந்தது. கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குனர் சித்ராபானு வரவேற்றார். நீலகிரி மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் மணி தலைமை வகித்தார். தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி, டாக்டர். செல்வராஜ், மற்றும் பெங்களூரு இயற்கை வேளாண்மை மண்டல மையம் இளநிலை விஞ்ஞானி சந்திரபிரபா பண்டாரி ஆகியோர், சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு, பேசினர்.

## அடிபட்ட நாரைக்கு வனத்துறை சிகிச்சை

கூடலூர்: கூடலூர் நகரை ஒட்டிய நீரோடையில், அடிபட்டு கிடந்த நாரையை வனத்துறையினர் மீட்டனர்.

கூடலூர் நுாலகம் எதிரே செல்லும், நீரோடையில் நாரை ஒன்று அடிபட்டு உயிருக்கு போராடியதை மக்கள் பார்த்து, வனத்துறைக்கு தெரிவித்தனர்.தகவல் அறிந்து அப்பகுதிக்கு வந்த, வனக்காவலர் மகேந்திரபாண்டியன், நாரையை கூடலூர் அரசு கால்நடை மருத்துவமனைக்கு எடுத்து சென்று, சிகிச்சை அளித்தார். வனத்துறையினர் தொடர்ந்து, அதனை தங்கள் பாதுகாப் பில் வைத்து அதற்கு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

**மண் வளத்தை பாதுகாக்க பயறு வகைகளை பயிரிடுங்கள்**

தேவிபட்டினம்: வேர் முடுச்சுகளில் நைட்ரஜனை சேமிக்கும் பயறுவகைகளை பயிட்டால் மண் வளம் பாதுகாக்கப்படும் என, வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆர்.எஸ்.மங்கலம், தேவிபட்டினம், பரமக்குடி, நயினார்கோவில், கீழக்கரை உள்ளிட்ட ஒருசில பகுதிகளில் மட்டுமே உளுந்து, தட்டை, மின்னி, துவரை போன்ற பயறு வகைகளை சாகுபடி செய்கின்றனர்.

மற்ற பகுதிகளில் தொடர்ந்து நெல் பயிர்களை மட்டுமே சாகுபடி செய்கின்றனர். ஒரே பயிரை தொடர்ந்து பயிரிடுவதால் நிலங்களில் உள்ள குறிப்பிட்ட சத்துக்கள் குறைகின்றன. இதனால் மண் வளம் பாதிக்கப்பட்டு மகசூல் குறைவு ஏற்படுகிறது.

வேளாண்மைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: ஒரே வகை பயிரை தொடர்சியாக பயிரிட்டால் மண்வளம் பாதிக்கும். நெல் அறுவடைக்கு பின் உளுந்து, தட்டை, மின்னி உள்ளிட்ட பயறு வகைகளை சாகுபடி செய்யலாம். பயறு வகை செடிகள் வேர் முடுச்சுகளில் நைட்ரஜன் சத்துக்களை சேமித்து வைக்கின்றன. இதனால் மண்வளம் மேம்படுகிறது. மறுமுறை நெல் பயிரிடும்போது நல்ல மகசூல் கிடைக்கிறது, என்றார்.

**மரவளர்ப்பால் உருவாகுது பசுமைவெளிச் சாலைகள்**

மாசில்லா நகரங்களை உருவாக்குவதில் மரம் வளர்ப்பு மிகவும் அவசியம்.இதை தற்போதயை இளைய தலைமுறையினர் நன்கு உணர்ந்துள்ளனர். அதிலும் சமூக வலைதளங்களால் ஈர்க்கபட்ட மாணவசமுதாயம் அதிகளவில் மரவளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இயற்கையை காப்பதே தேசத்திற்கு செய்யும் மிகப்பெரிய தொண்டு என்பதை லட்சியமாக கொண்டு பலர் விளம்பரமில்லாமல் அமைதியாக செய்து வருகின்றனர். இவர்களின் செயல்பாடுகளால் ஈர்க்கபட்ட பெரியவர்களும் தாங்களாகவே, அவர்களுடன் இணைந்து செயல்பட்டு மரவளர்ப்பில் ஆர்வம் காட்டுகின்றனர். இவ்வாறு மரம் வளர்ப்பது, இயற்கையை காப்பது போன்ற பணிகளில் ஈடுபடுவோர் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இது நகரங்களை மட்டுமின்றி கிராமத்து இளைஞர்களிடம் வேரூன்ற துவங்கி உள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் மாரியம்மன்கோயில்தெரு, மாயாண்டிபட்டி, கீழபட்டி, ஊரணிபட்டி, முதலியார்பட்டி தெருக்களில் நூற்றாண்டுகளுக்கு முன்பு சாலையின் இருபுறமும் நடபட்ட மரங்கள் இன்றும் மக்களுக்கு பசுமைவெளிச்சாலைகளாக இருக்கிறது. இதன் கீழ் ஏராளமான நெசவாளர்கள் அமர்ந்து நூல் நூற்கின்றனர். இதேபோல் கூனங்குளம் தெற்குதெருவிலும் இருபுறமும் மரங்கள் காணப்படுகிறது.

மாரியம்மன்கோயில் பின்புறம் மாசுக்கள் நிறைந்த பகுதி அப்பகுதி இளைஞர்களின் முயற்சியால் மரங்கள் அடர்ந்த பகுதியாக இருக்கிறது. இதேபோல் ஸ்ரீவில்லிபுத்தூர் நகரை தாண்டி அப்பயநாயக்கர்பட்டியிலிருந்து மயூரா பள்ளி வழியாக நாகபாளையம் செல்லும் ரோட்டின் இருபுறமும் நூறுக்கும் மேற்பட்ட மரங்கள் நடபட்டுள்ளன.

வடக்கு கரிசல்குளத்திற்கு செல்லும் ரோட்டின் இருபுறமும் மரங்கள் வளர்ந்து வருகிறது. இந்த ரோடுகள் பசுமைவெளிச்சாலையாக உருவெடுத்து வருகிறது.

நகராட்சி 27வது வார்டு சீனியாபுரம் தெற்குதெரு,வடக்குதெரு, மேற்குதெரு, குறுக்கு தெருக்களில் பசுமை தெருக்களாக மாற்றும் விதத்தில் அப்பகுதியில் மரகன்றுகள் நடப்பட்டுள்ளன. இதை அனைத்து

பகுதிகளிலும் மேற்கொண்டால் பெரும்பாலான தெருக்கள், ரோடுகள் பசுமைவெளி சாலையாகும் என்பதில் ஐயமில்லை.

கருவேல மரத்திற்கு பதில் வேம்பு, புங்கை காளிதாஸ் (மல்லிபுதூர்): அதிகளவு நீரினை உறிஞ்சும் கருவேலமரங்கள் வறட்சியை உருவாக்கி வருகிறது.

மேலும் கிராமங்களில் ரோட்டின் இருபுறமும் கருவேலமர முட்கள் மக்களை பாதித்து வருகிறது. அப்பகுதிகளில் வேம்பு, புளி, புங்கை ஆகிய மரங்களை நடமுடிவு செய்தேன்.

அதன்படி அப்பயநாயக்கர்பட்டி மயூரா ஸ்கூலிலிருந்து நாகபாளையம் செல்லும் ரோட்டின் இருபுறமும் வேம்பு, புங்கை, புளி மரகன்றுகளை நட்டு அப்பகுதி மக்களின் ஒத்துழைப்புடன் வளர்த்துள்ளேன். இது மிகவும் அடர்த்தியாக வளரும்போது இந்த கிராமத்து ரோடு நிழல்கள் நிறைந்த பசுமைவெளிசாலைகளாக உருவெடுக்கும்.

மரம் வளர்ப்போம்; மண் உயிர் காப்போம்

சங்கரம்மாள் (பேராசிரியை, ஸ்ரீவில்லிபுத்தூர்): நீரை தேக்கி வைப்பதில் மரம் முதலிடம் வகிக்கிறது. நமது முன்னோர்கள் அமைத்த குளங்கள், நீர்நிலைகள் மரங்கள் வளர்வதற்கும், மனிதர்கள் பயன்படுத்துவதற்கும், பறவைகள் தங்குமிடமாகவும் பயன்படுகிறது.

இன்று எங்கே குளம்? எங்கே ஏரி? எங்கே கிணறு? என தேடவேண்டியுள்ளது. இன்றைய இளைய தலைமுறையினருக்கு நீர்நிலைகள், மரவளர்ப்பு, சுற்றுசூழல் தூய்மை ஆகியவற்றின் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் எதிர்கால தலைமுறையினர் நோயின்றி வாழலாம். இதற்குரிய முறைகளை அவர்களுக்கு எடுத்துக்கூறி நெறிப்படுத்துவது, நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

ஒரு ஏக்கரில் மரம் வளர்த்தால் 19 மனிதர்களுக்கு தேவையான ஆக்சிஜனை, தூய்மையான காற்றை ஒரு ஆண்டுக்கு மரங்கள் வழங்கும். வாழும்போதும், வாழ்ந்த பின்பும் நம் குழந்தைகள் மூலம் மரம்வளர்ப்பதின் பயனை உலகிற்கு பறைசாற்றுவோம். இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்வோம். நோயில்லா பெருவாழ்வு வாழ்வோம்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தோகைமலை பகுதியில்அறுவடைக்கு தயாராக சம்பா நெற்பயிர்கள்**

தோகைமலை : தோகைமலை பகுதியில் சம்பா சாகுபடி நெல் பயிர்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. தோகைமலை பகுதிகளில் கிணற்றுப் பாசனம் மற்றும் ஆற்றுப் பாசனங்களில் சம்பா சாகுபடி செய்த நெல் பயிர்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. தோகைமலை ஒன்றியங்களில் நெய்தலூர், சேப்ளாப்பட்டி, முதலைப்பட்டி மற்றும் குளித்தலை பகுதிகள், நங்கவரம், நச்சலூர், குறிச்சி, சூரியனூர் போன்ற பகுதிகளில் ஆற்றுப் பாசனமாகவும், கள்ளை, தளிஞ்சி, தோகைமலை, நாகனூர், கழுகூர், ஆர்ச்சம்பட்டி, ஆர்டிமலை, புழுதேரி, வடசேரி ஆலத்தூர், பாதிரிபட்டி உட்பட 17 ஊராட்சிகள் கிணறு, ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் குளத்துப் பாசனப்பகுதிகளாகவும் இருந்து வருகிறது.இந்த பகுதிகளில் கடந்த செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் சம்பா சாகுபடி நடவு செய்திருந்தனர்.இதில் சம்பா சாகுபடியில் ஆந்திரா பொன்னி, கர்நாடகா பொன்னி, பொன்மணி போன்ற நெற்பயிர்களை சாகுபடி செய்திருந்தனர். இப்பகுதியில் விலையும் சிறப்பு வாய்ந்த நெல்கள்

தமிழகத்தின் பல்வேறு இடங்களுக்கு செல்கின்றன. வருசை நடவு என்ற ஒற்றை சாகுபடி முறைகளிலும் சாதாரண முறைகளிலும் விவசாயிகள் நடவு செய்யப்பட்டு வந்தனர். தற்போது இப்பயிர்கள் வருகிற தை மாதங்களில் அதாவது ஜனவரி இறுதியில் அறுவடைக்கு செய்வதற்கு தயார் நிலையில் உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**ஊராட்சி அளவில் நெல் கொள்முதல் நிலையங்கள்**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் சுமார் 62ஆயிரம் எக்டேர் நெல் விவசாயம் செய்யப்பட்டுள்ளது. விதைப்பு மற்றும் நாற்று நடவுப்பணிகள் கடந்த அக்டோபர் முதல் தொடங்கியது. மாவட்டத்தின் சில பகுதிகளில் தற்போது அறுவடைப்பணி தொடங்கியுள்ளது. தொடர்ந்து அனைத்து பகுதிகளிலும் நெல் அறுவடை செய்யப்பட உள்ளது. அறுவடை செய்யப்படும் நெல்லை விவசாயிகளிடம் இருந்து வாங்க அரசு சார்பில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் இந்த கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும். கடந்த ஆண்டுகளில் மாவட்டத்தில் சுமார் 30க்கும் மேற்பட்ட இடங்களில் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டது. மேலும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் சார்பிலும் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் அமைக்கப்படும் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் இருந்து நெல்லை வாங்க பல நாட்கள் ஆகும். இதனால் திறந்த வெளியில் வைக்கப்படும் நெல் மூட்டைகள் வெயில் மற்றும் மழையால் பாதிக்கப்படும். குறைவான இடங்களில் கொள்முதல் நிலையங்கள் திறப்பதால் இப்பிரச்னை ஏற்படுவதாகவும், எனவே ஊராட்சிக்கு ஒன்று என்ற விகிதத்தில் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: ஊராட்சிக்கு ஒன்று என்ற அளவில் நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் கொள்முதல் நிலையங்கள் அமைக்க வேண்டும். நெல்லை

தனியார் அல்லாமல் கொள்முதல் நிலையம் சார்பிலேயே சுத்தம் செய்ய வேண்டும் என்றனர்.

**செரிமானத்தை தூண்டும் கரும்பு**




உடலுக்கு குளுமையை தரக்கூடியதும், செரிமானத்தை தூண்டும் தன்மை உடையதும், சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சலை போக்க கூடியதும், விஷக்கடிக்கு மருந்தாக அமைவதும், ஊட்டச்சத்து மிக்கதுமான கரும்புவின் மருத்துவ குணங்களை பற்றி பார்ப்போம். பொங்கல் பண்டிகையின்போது பயன்படுத்தும் முக்கிய பொருளாக கரும்பு விளங்குகிறது. பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட கரும்பு சாறை பயன்படுத்தி செரிமானத்தை தூண்டும் மருந்து தயாரிக்கலாம்.

**தேவையானபொருட்கள்:**

கரும்புசாறு,

எலுமிச்சை,

இஞ்சி.

ஒரு டம்ளர் கரும்புச் சாறு எடுத்துக்கொள்ளவும். அதனுடன் சிறிது எழுமிச்சை சாறு, ஒரு ஸ்பூன் இஞ்சி சாறு சேர்த்து கலக்கவும். உணவுக்கு பின்னர் இதை எடுத்துக் கொண்டால் ரத்தம் சுத்தமாகும். செரிமானத்தை தூண்டும். பொங்கலின்போது சாப்பிடும் உணவுகள் செரிக்கவும், வயிற்று

நோய்களில் இருந்து பாதுகாக்கவும் இது உதவுகிறது. இந்த சமயத்தில் கரும்பு அதிகளவில் கிடைக்கும் என்பதால் அதை நன்றாக பயன்படுத்தி கொள்ளலாம்.

50 மில்லி கரும்பு சாறுடன், ஒரு ஸ்பூன் தயிர் சேர்த்து கலந்து சாப்பிட்டால், உடல் எரிச்சல் அடங்கி குளுமை பெறும். கை, கால் எரிச்சல் சரியாகும். பல்வேறு சிறப்புகளை கொண்ட கரும்புவின் வேரை பயன்படுத்தி நீர் சுருக்கு, சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சலை போக்கும் மருந்துதயாரிக்கலாம்.

வேரில் மண் இருக்கும் என்பதால் தண்ணீரில் போட்டு நன்றாக அலசி எடுத்துக் கொள்ளவும். ஒருபிடி அளவுக்கு வேர் எடுத்து அதனுடன் ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி கொதிக்க வைக்கவும். பின்னர், வடிகட்டி தேன் சேர்த்து குடித்தால், சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சல், சிறுநீரோடு ரத்தம் கலந்து போகுதல், வலியோடு சிறுநீர் செல்லுதல் போன்றவை சரியாகும். சிறுநீர் பெருக்கியாக விளங்கும் கரும்பு தொற்றுநோய் ஏற்படாமல்காக்கிறது.

'கரும்பு தின்ன கூலியா' என்ற பழமொழிக்கு ஏற்ப அனைவரும் விரும்பி உண்ணக் கூடியது கரும்பு. மிகுந்த சுவையான இதில் ஏராளமான நன்மைகள் உள்ளன. செரிமானத்தை தூண்டுவதுடன், உடலுக்கு குளிர்ச்சியைதரக்கூடியது.

கரும்பில் இருந்து எடுக்க கூடிய காடியை பயன்படுத்தி பூச்சிக்கடிக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம். கரும்பு காடி என்பது கரும்பு சாறை புளிக்க வைத்து தயாரிப்பார்கள். இது நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். இந்த கரும்பு காடியை பூச்சிக்கடி, தேள்கடி உள்ள இடத்தில் தடவினால் விஷம் முறியும். வலியும் வீக்கமும் குறையும். கரும்புவின் வேர் பகுதி சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சலை போக்கும் என்பதால்,

நமக்கு கரும்பு கிடைக்கும்போது அதன் வேர்களை சேகரித்து காயவைத்து பொடித்து எடுத்துக்கொள்ள வேண்டும். இதை ஆண்டு முழுவதும் பயன்படுத்தலாம்.

**இருமலை போக்கும் டிசம்பர் பூக்கள்**



இருமல், சளியை போக்க கூடியதும், உடல் வலியை சரிசெய்யும் தன்மை கொண்டதும், விஷக்கடிக்கு மருந்தாவதும், கல்லீரலை பாதுகாக்க கூடியதுமான டிசம்பர் பூக்களின் மருத்துவ குணங்களை பற்றி நாம் பார்ப்போம். டிசம்பர், ஜனவரி மாதங்களில் பூத்துக் குலுங்கும் மலர் டிசம்பர்பூ.

இந்த செடியில் வென்னிறம், நீலம், செந்நிற பூக்கள் இருக்கும். வீடுகள், தோட்டங்களில் வளரக்கூடியது. கனகாம்பரம் வகையை சார்ந்தது. இதன் பூக்கள், இலைகள், வேர்கள் மருத்துவ குணங்களை கொண்டது. டிசம்பர் பூவானது விஷக்கடிக்கு மருந்தாகிறது. சர்க்கரை நோயை கட்டுப்படுத்த கூடியது. ஈரலை பலப்படுத்தும் தன்மை கொண்ட டிசம்பர் பூ புத்துணர்வு தரக்கூடியது. இருமலை போக்கும் சக்தியை பெற்றது. சளியை கரைக்கும். வீக்கத்தை குறைக்க கூடியது.இதன் இலைகள், பூக்களை பயன்படுத்தி காய்ச்சல், உடம்பு வலியை போக்கும் மருந்து தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: டிசம்பர் பூ, இலைகள், பனங்கற்கண்டு.

சிறிது இலைகளுடன், 15 பூக்கள் வரை சேர்க்கவும். இதனுடன் கால் ஸ்பூன் சீரகம், அரை ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி 50 முதல் 100 மில்லி எடுத்துக் கொள்ளலாம். இது, சளியோடு கூடிய இருமல், அடிக்கடி தொல்லை தரும் இருமலை போக்கும். உடல் வலி சரியாகும். கல்லீரல் பாதிப்பை தடுக்கும். ஈரலை சீராக செயல்படவைக்கும்.

டிசம்பர் பூவின் இலை மற்றும் வேரை பயன்படுத்தி சளி, இருமல், ரத்தசோகைக்கான மருந்து தயாரிக்கலாம். சிறிது இலைகள், வேர்ப்பட்டையுடன் சுக்குப்பொடி, நீர் சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிக்கட்டி தேன் சேர்த்து குடித்தால், பல் வலி சரியாகும். சளி, இருமல் மற்றும் ரத்தசோகை குணமாகும். டிசம்பர் பூவின் விதைகளை பயன்படுத்தி பூச்சிக்கடிக்கான மருந்து தயாரிக்கலாம். விதைகளுடன் சிறிது மிளகு பொடி, ஒரு டம்ளர் தண்ணீர் சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும். பின்னர், வடிகட்டி தேன் சேர்த்து குடித்தால், பூச்சி கடியால் ஏற்படும் விஷம் முறியும். விதையை பயன்படுத்தி பூச்சிக்கடிக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம். டிசம்பர் பூவின் விதைகளை நசுக்கி எடுத்துக் கொள்ளவும். அதனுடன் சிறிது சுண்ணாம்பு சேர்த்து, நீர்விட்டு குழைத்து பூச்சிக்கடி உள்ள இடத்தில் மேல்பத்தாக போடவும். பூச்சிக்கடி விஷத்தால் ஏற்படும் பாதிப்பில் இருந்துதடுக்கிறது.

பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட டிசம்பர் பூவின், இலை மற்றும்

விதையை கொண்டு தயாரிக்கப்படும் தேனீரானது, சிறுநீர் பெருக்கியாக பயன்படுகிறது.ஈரலைபலப்படுத்துகிறது.

**சைனசை குணப்படுத்தும் தும்பை இலை**




வீட்டில் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களை கொண்டு நோய்களை குணப்படுத்தக் கூடிய மருந்துகளை தயாரிக்கலாம். இதையொட்டி குடிநீர், தேநீர், எண்ணெய் போன்றவற்றை பார்த்து வருகிறோம். தற்போது இதில் புகை போட்டு குணப்படுத்தும் சில மருந்து வகைகளை காணலாம். தும்பை இலைகளை பயன்படுத்தி நாம் சைனசை குணப்படுத்தும் புகையை தயார் செய்யலாம்.

தும்பை செடியை நாம் அன்றாடம் சாலை யோரங்களிலும், நடைபாதைகளிலும் காணலாம். வெள்ளை நிறத்தில் சிறிய பூக்களை பூக்கும். இந்த செடியின் பூ, இலை என அனைத்தும் மருத்துவ குணங்களை கொண்டதாக விளங்குகிறது. சைனசை குணப்படுத்தும் புகையை தயாரிக்க தேவையான பொருட்கள் தும்பை இலை. மஞ்சள் பொடி. சாம்பிராணி போடுவதற்கான கரண்டியில் மிகவும் பாதுகாப்பான முறையில் தணலை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதில் நெருப்பு புகையிடும் வகையில் சாம்பிராணியை போட வேண்டும். அத்துடன் அந்த தணலில் சிறிதளவு தும்பை இலை மற்றும் மஞ்சள் பொடி ஒரு சிட்டிகை போட வேண்டும். இந்த புகையை தலைக்கு போடும் போது தலையில் ஏற்பட்டுள்ள நீர் கோர்ப்பு, சைனஸ் பிரச்னைகள் ஆகியவற்றில் இருந்து நாம் நிவாரணம் பெறலாம். இவ்வாறு புகையை கூந்தலுக்கு போடும் போது, தணல் இருக்கும் கரண்டி மீது ஒரு அலுமினிய சல்லடையை கவிழ்த்து அதன் மீது கூந்தலை காட்டுவதால் நெருப்பால் ஏற்படும் பாதிப்பில் இருந்து பாதுகாப்பாக புகையை பிடிக்க முடியும்.

மேலும் இந்த புகையை சுவாசிப்பதால் மூக்கடைப்பு, தலைபாரம், தலையில் நீர் கோர்த்தல் போன்ற பிரச்னைகளில் இருந்து நீங்கி சுகம் காணலாம். மேலும் தும்பை இலை மற்றும் மஞ்சள் கலந்த இந்த புகையானது உடலுக்கு மட்டுமின்றி, நமது வீட்டை சுற்றியுள்ள உடலை பாதிக்கக் கூடிய டைபாய்டு, மலேரியா, யானைக்கால் போன்ற நுண் கிருமிகளையும் அழித்து சுற்றுப்புறத்தை பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உதவுகிறது.

மேலும் இந்த நோய் கிருமிகளை பரப்பக் கூடிய கொசு, ஈ தொல்லைகளில் இருந்து விடுபடுவதற்கும் இது உதவுகிறது. அவற்றை தும்பை-மஞ்சள் புகை விரட்டி அடிப்பதால் நோய் பரவாமல் தடுக்கப்படுகிறது.அதே போல் நொச்சி மற்றும் பேய் விரட்டி இலைகளை இதே போல் பயன்படுத்தி புகையிடுவதன் மூலம் கொசுத் தொல்லைகளில் இருந்து விடுபடலாம். நொச்சி மிகச் சிறந்த கொசு விரட்டியாக செயல்படுகிறது. இந்த செடியை நாம் வளர்ப்பதன் மூலமும், அதன் இலைகளை புகையிடுவதன் மூலம் நம்ைம சுற்றியுள்ள கொசுக்களை விரட்டி அடிக்க முடியும்.

இதனால் கொசுக்கள் மூலமாக பரவும் நோயில் இருந்தும் நம்மை காத்துக் கொள்ளலாம்.அதேபோல் வேப்பிலை, மாவிலை மற்றும் நிலவேம்பு இலை ஆகியவற்றை பயன்படுத்தி புகையிடுவதன் மூலம் பல்வேறு மருத்துவ குணங்களை நாம் பெற முடியும். இந்த மூன்று இலைகளையும் ஒன்றாக எடுத்துக் கொள்ள வேண்டும். புதியதாக கிடைக்காத பட்சத்தில், கிடைக்கும் காலத்தில் இவற்றை காய வைத்து எடுத்துக் கொண்டு பொடி செய்து மூன்றையும் கலந்து எடுத்துக் கொள்ளலாம்.

இதை சாம்பிராணி பொடி போல பயன்படுத்தி புகை போடலாம். பாதுகாப்பான கரண்டியில் எடுக்கப்பட்ட தணலில் இந்த மூன்றையும் கலந்தும், சிறிது சாம்பிராணி கலந்தும் இந்த புகையை தயார் செய்யலாம். வேப்பிலை நோய் கிருமிகளை அழிக்கக் கூடியதாக இருக்கிறது. மாவிலை பூஞ்சைகள், பாக்டீரியாக்களை அழிக்கக் கூடியதாக விளங்குகிறது. அதே போல் நில வேம்பு புகை நோய் எதிர்ப்பு சக்தியை நமக்கு தருகிறது. இவ்வாறு அன்றாடம் கிடைக்கும் பொருட்களை கொண்டு நாம் மருந்தை தயார் செய்து ஆரோக்கியத்துடன் வாழலாம்.

**உடலுக்கு நன்மை தரும் எண்ணெய்கள்**



உடலுக்கு நன்மையை கொடுக்க கூடிய கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் குறித்து பார்ப்போம்.அத்யாவசிய தேவைகளுள் ஒன்று எண்ணெய். பாரம்பரிய எண்ணெய்களான நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை உணவில் சேர்த்துக்கொள்வதால் பல்வேறு நன்மைகள் கிடைக்கிறது.கடலை எண்ணெய்யை பயன்படுத்தி சருமத்தை பாதுகாப்பது குறித்து பார்ப்போம்.

2 ஸ்பூன் கடலை எண்ணெய்யுடன் அரை மூடி அளவு எழுமிச்சை சாறு, அரை ஸ்பூன் தேன் சேர்த்து கலக்கவும். இதை வாரம் ஒருமுறை உடல் முழுவதும் தேய்த்து குளிப்பதால் தோல் சுருக்கம் வராமல் பாதுகாக்கும். கடலை எண்ணெய்யை உணவின் சுவையை கூட்டுவதற்காக பயன்படுத்துகிறோம். பாதாம் எண்ணெய்யை விட மிகுந்த சத்துக்கள் உடையது. உணவுடன் சேர்த்துக் கொண்டால் நல்ல கொழுப்பு கிடைக்கும். உஷ்ணத்தை தருவதுடன் தோலுக்கு பளபளப்பை கொடுக்கும். கடலை எண்ணெய்யில் வைட்டமின் இ சத்து அதிகம்

உள்ளது.

தற்போது நாம் சுத்திகரிப்பு செய்த எண்ணெய்கள், தவிட்டில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய்களை பயன்படுத்துகிறோம். பாரம்பரிய எண்ணெய்களை பயன்படுத்திய நம் முன்னோர்கள் திடகாத்திரமான உடல், அழகிய சருமத்தை பெற்றிருந்தனர்.நல்லெண்ணெய் பயன்படுத்தி தலைக்கு தேய்த்து குளிக்கும் தைலம் தயாரிக்கலாம்.

தேவையான அளவு நல்லெண்ணெய் எடுத்துக்கொள்ளவும். இதனுடன் சீரகம், மிளகுப்பொடி கால் ஸ்பூன் சேர்த்து தைலபதத்தில் காய்ச்ச வேண்டும். இதை தலைக்கு தேய்து குளித்தால் பொடுகு வராது.எள்ளில் இருந்து கிடைக்க கூடியது நல்லெண்ணெய். இதை தலைக்கு தேய்த்து குளிப்பதால் பொடுகு இல்லாமல் போகும். கொழுப்பு சத்து நிறைந்தது. உள் உறுப்புகளுக்கு பலம் கொடுக்க கூடியது. வெறும் வயிற்றில் தினமும் ஒரு ஸ்பூன் நல்லெண்ணெய் சாப்பிடுவதால் உடல் எடை கூடும்.

வாய் கொப்பளிப்பதால் பற்கள் ஆரோக்கியம் பெறும். கன்னம் பலம் அடையும். முக வசீகரம் ஏற்படும். நல்லெண்ணெய் உணவுக்கு பயன்படுவதோடு, சனிக்கிழமைதோறும் உடலுக்கு தேய்த்து குளிப்பதால் தோல் ஆரோக்கியம் பெறும். தோல்நோய்கள் இல்லாமல் போகும். தேங்காய் எண்ணெய்யின் மருத்துவ குணங்களை பார்ப்போம். தேங்காய் எண்ணெய்யை தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் பொடுகு தொல்லை இருக்காது. முடி பளபளப்பாகவும், கருப்பாகவும் இருக்கும்.

தேங்காய் எண்ணெய்யுடன், கருவேப்பிலையை நீர்விடாமல் பொடித்து சேர்க்கவும். தைலப்பதத்தில் காய்ச்சி தலைக்கு தடவுவதால் முடி கருப்பாகிறது. பொடுகு இல்லாமல் போகிறது. இளநரை தடுக்கப்படுகிறது. தலைக்கு ஆரோக்கியம் கிடக்கிறது. தலைமுடி நன்றாக

வளரும்.நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை நாம் அன்றாடம் பயன்படுத்தும்போது பல்வேறு நோய்கள் வராமல் பாதுகாக்கலாம்.

**இருமல், சளியை போக்கும் துளசி, தனியா**




பனிக்காலத்தில் அடிக்கடி இருமல், சளி போன்ற பிரச்னைகள் ஏற்படும். இதை போக்கும் வகையில் துளசி, தனியா ஆகியவற்றை பயன்படுத்தி நெஞ்சக சளியை போக்கும் துளசி குடிநீர் தயாரிக்கலாம்.

**தேவையான பொருட்கள்**: துளசி, ஏலக்காய், லவங்கம், பச்சை கற்பூரம். ஒரு லிட்டர் தண்ணீரை கொதிக்க வைத்து எடுத்துக் கொள்ளவும். இதில், 2 பிடி அளவு துளசி, 2 ஏலக்காய், 5 லவங்கம், பச்சை கற்பூரம் சேர்த்து சுமார் ஒரு மணி நேரம் வரை ஊறவைத்து குடிக்கவும். இந்த குடிநீர் நெஞ்சக சளியை அகற்றுவதோடு இருமலை குணமாக்கும். காய்ச்சல், உடல் வலி சரியாகும். செரிமான கோளாறுகள் சீராகும். துளசி பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. துளசியை அடிக்கடி எடுத்துக்கொண்டால் முக வசீகரம் உண்டாகும். ரத்தம் சுத்தமாகும். உடல் ஆரோக்கியம் பெறும். பச்சை கற்பூரம் ரத்த அழுத்தத்தை குறைக்கும்

தன்மை கொண்டது. ஏலக்காய் வாயு தொல்லையில் இருந்து விடுபட வைக்கும். லவங்கம் சீதள நோய்களை சரிசெய்யும். தனியாவை பயன்படுத்தி வறட்டு இருமலை போக்கும் குடிநீர் தயாரிக்கலாம். தண்ணீரை கொதிக்க வைத்து எடுத்துக் கொள்ளவும். இதனுடன் வறுத்த தனியா பொடி, பனங்கற்கண்டு சேர்த்து சுமார் ஒரு மணி நேரம் வரை ஊறவைத்து பின்னர் குடிக்கலாம். ஒரு டம்ளர் தண்ணீருக்கு கால் ஸ்பூன் தனியா, கால் ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்க்கலாம். இந்த குடிநீரை குடித்தால் வறட்டு இருமல், தொண்டை வலி சரியாகும். உள் உறுப்புகள் பலமாகும். நுரையீரல் கோளாறுகளுக்கு மருந்தாகிறது.

பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட தனியாவுக்கு வயிற்று புண்களை ஆற்றும் தன்மை உண்டு. குளிர்ச்சியை தரக்கூடியது. சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சலை போக்க கூடியது. வயிற்றுபோக்கை தடுக்கும் பதிமுகத்தை பயன்படுத்தி குடிநீர் தயாரிக்கலாம். கேரளாவில் அதிகம் பயன்படுத்தும் மூலிகை பதிமுகம். ஆரோக்கியமான குடிநீருக்கு பயன்படும் பதிமுகம், நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். மர செதில்கள் மாதிரி இருக்கும். ஒரு டம்ளர் வென்னீருக்கு சிறிது பதிமுகம் சேர்க்கவும். சுமார் ஒரு மணிநேரம் ஊறவைத்தபின் அது சிவப்பு கலரில் இருக்கும். இந்த குடிநீர் வயிற்றுபோக்கு ஏற்படாமல் தடுக்கும். ரத்தநாளங்களில் அடைப்பு ஏற்படாமல் தடுக்கவல்லது. குடிநீரை சுத்தப்படுத்தும் தன்மை கொண்டதாக இருக்கிறது. சர்க்கரை நோய்க்கு மருந்தாகிறது. ரத்தத்தை சுத்தப்படுத்தும் ஆற்றல் உடையது. நோய் எதிர்ப்பு சக்தி உடையதாக அமைகிறது. தோல்நோய் வராமல் தடுக்கிறது.

உடலுக்கு இதம் அளிக்கும் வெட்டி வேர்



வெட்டிவேர் நாம் அனைவரும் நன்றாக அறிந்த மருந்து பொருளாகும். மிகச்சிறந்த வாசனை பொருளாகவும், மருந்தாகவும் வெட்டி வேர் பயன் தருகிறது. வெட்டி வேரை சிறிய துண்டுகளாக வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். இதை நீரில் இட்டு நன்றாக ஊற விட வேண்டும். இந்த நீரை நாம் தினமும் பருகி வருவதன் மூலம் உடலுக்கு குளிர்ச்சியும், கண்களுக்கு குளிர்ச்சியும் ஏற்படுத்துகிறது. சிறுநீரகத்தில் கற்களை சேராமல் தடுக்கும் ஆற்றலும் இந்த வெட்டி வேர் குடிநீருக்கு உள்ளது. 20 லிட்டர் அளவு கொண்ட பானையில் நீரை எடுத்து அதில் ஒரு பிடி வெட்டி வேரை போட்டு வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நமக்கு இரண்டு நாட்களுக்கு மருத்துவ குணம் கொண்ட மணம் மிகுந்த குடிநீர் கிடைக்கிறது. வெயில் காலத்தில் வெட்டி வேரை ஊற வைத்த நீரை பருகுவதால் நீர் சுருக்கு எனப்படும், வெயில் கால அவஸ்தையான சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல், வேதனை போன்றவற்றை இதை தணிக்கிறது. சிறு நீர் பாதையில் ஏற்படும் கற்களால் உண்டாகும் வலி ஆகியவற்றையும் வெட்டி வேர் நீர் போக்குகிறது.

வெட்டிவேரால் செய்யப்பட்ட பாயை தயார் செய்து ஜன்னல், வாசல் போன்ற இடங்களில் தொங்க விட்டு அதில் நீர் தெளித்து அதன் மூலம் உருவாகும் வாசனை காற்றை சுவாசிப்பதால் மன அமைதி ஏற்படுகிறது. உடலுக்கு குளிர்ச்சி ஏற்படுகிறது. வெட்டி வேர் நீரால் உடலை கழுவுவதால் வெயில் காலத்தில் ஏற்படும் வேர்க்குரு உள்ளிட்ட வெயில்கால தொல்லைகள் நீங்குகின்றன. அதே போல் நாம் நன்னாரி ஊறல் நீரின் மருத்துவ குணங்களை பற்றி இப்போது பார்க்கலாம். நன்னாரி வேர் பொதுவாக அனைத்து நாட்டு மருந்து கடைகளிலும் பரவலாககிடைக்கும்.

நன்னாரியால் செய்யப்படும் சர்பத்தை நாம் அனைவரும் வெயில் காலங்களில் பருகுவதுண்டு. இதுவும் உடலுக்கு நன்கு குளிர்ச்சியை கொடுக்கக் கூடிய உணவு பொருளாகும். நன்னாரியை நாம் தினமும் குடிநீராக எடுத்துக் கொள்ளலாம். இதற்கு ஒரு டம்ளர் தண்ணீரில் ஒரு துண்டு நன்னாரி வேரை சுமார் 4 மணி நேரம் நீரில் ஊற வைக்க வேண்டும். இது போன்ற ஊறல் நீர் தயாரிக்கும் போது இவற்றை எவ்வளவு நேரம் ஊற வைக்க வேண்டும் என்ற சந்தேகம் எழ வாய்ப்புள்ளது.

நன்னாரி,வெட்டி வேர் போன்றவற்றின் மணம் குறையும் வரை அதை நீரில் ஊறலாக போட்டு பயன்படுத்தலாம். அப்போது வரை அவற்றின் மருத்துவ குணம் குறைவதில்லை. நன்னாரி குடிநீர் பருகுவதால் சிறுநீரக கோளாறுகள் விலகுகின்றன. எரிச்சல் இல்லாமல் போகிறது. உள் உறுப்புகளுக்கு குளிர்ச்சியை கொடுத்து உடலுக்கு இதத்தை அளிக்கக் கூடியதாக அமைகிறது. அதே போல் ஓமத்தை பயன்படுத்தி தேநீர் தயார் செய்யலாம்.

ஒரு டம்ளர் தண்ணீரில் கால் ஸ்பூன் ஓமத்தை ஊற வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் இரண்டு டம்ளர் அளவுக்கு நீர் சேர்த்து நன்றாக கொதிக்க விட வேண்டும். பின்னர் இதை ஒரு டம்ளர் அளவுக்கு சுருக்கி பின் வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.ஓமம் உடலுக்கு வெப்பத்தை அளிக்கக் கூடியது என்பதால் கால் ஸ்பூன் அளவுக்கு எடுத்துக் கொண்டால் போதுமானது. ஓமம் மிகச் சிறந்த அளவில் பேதியை கட்டுப்படுத்தக் கூடியது. செரிமான கோளாறு, வயிறு மாந்தம், வயிற்றில் இரைச்சல் ஏற்பட்டு கழிசல் ஏற்படும் நிலை ஆகியவற்றை சரி செய்யும் குணம் ஓம குடிநீருக்கு உள்ளது. வயிற்று வலியை போக்கக் கூடியது. வயிற்று போக்கை நிறுத்தக் கூடியது. பெருங்குடலை பலப்படுத்தக் கூடியது. இவ்வாறு பல்வேறு வழிகளில் ஓமம் வயிற்று கோளாறுகளை சரி செய்கிறது. இவ்வாறு நாம் அன்றாடம் கிடைக்கும் பல்வேறு பொருட்களை கொண்டு குடிநீர் மற்றும் தேநீர் தயாரித்து பருகி வர உடல் ஆரோக்கியத்துடன் விளங்கும்.

இன்றைய வேளாண் செய்திகள்

**உலக ஆயுர்வேத திருவிழா; இம்மாத இறுதியில் கேரளாவில் நடக்கிறது**



கோழிக்கோடு,

3-வது உலக ஆயுர்வேத திருவிழா இம்மாத இறுதியில் கேரளாவின் கோழிக்கோட்டில் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு கேரள ஆயுர்வேத கண்காட்சியை அம்மாநிலம் முழுவதும் இன்று முதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஆயுர்வேதம் குறித்த கருத்தரங்குகள், சாலை பிரச்சாரங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு இலவச மருத்துவ முகாம்கள் ஆகியவை இன்று முதல் வரும் 28-ந்தேதி வரை நடத்தப்படுகிறது. இந்நிலையில், விரைவில் நடைபெற உள்ள உலக ஆயுர்வேத திருவிழாவில் அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், மத்திய ஆசிய நாடுகள், சீனா, நேபாளம், தாய்லாந்து, சிங்கப்பூர், ஜெர்மனி, ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து, செர்பியா, இலங்கை, அர்ஜெண்டினா, பிரேசில் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 5 ஆயிரம் பேர் கலந்து கொள்ள உள்ளனர். அவர்களில், மருத்துவம் பயின்று வரும் மாணவர்கள், மருத்துவமனைகள், தொண்டு நிறுவனங்கள் ஆகியோரும் அடங்குவர்.

மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகத்துடன் இணைந்து இந்த ஆயுர்வேத திருவிழா நடத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

**இந்தியாவின் முதல் இயற்கை விவசாய மாநிலமாகிறது சிக்கிம்; வரும் 18-ந்தேதி பிரதமர் மோடி முறைப்படி அறிவிக்கிறார்**



கொல்கத்தா,

75 ஆயிரம் எக்டேர்கள் விவசாய நிலத்தை முற்றிலுமாக பயிரிடுவதற்கு ஏற்ற நிலமாக மாற்றியிருப்பதன் வாயிலாக சிக்கிம் மாநிலம் இந்தியாவின் முதல் இயற்கை விவசாய மாநிலமாக அறிவிக்கப்பட உள்ளது. வரும் 18-ந்தேதி கேங்டாக்கில் நடக்க உள்ள விவசாய கருத்தரங்கில் இதை பிரதமர் மோடி முறைப்படி அறிவிக்க உள்ளதாக சிக்கிம் ஆர்கானிக் மிசன் தெரிவித்துள்ளது. 12 ஆண்டுகளுக்கு முன்பாக 2003-ல் பவான் சாம்ளிங் தலைமையிலான அரசு சிக்கிம் மாநிலத்தை இயற்கை விவசாய மாநிலமாக மாற்ற வேண்டும் என சட்டசபையில் அறிவித்து இருந்தது. பிறகு, விவசாய நிலங்களில் ரசாயனங்களுக்கு முற்றிலுமாக தடை செய்யப்பட்டது. ரசாயன உர விற்பனையும் தடை செய்யப்பட்டது. பிறகு, இயற்கை

விவசாயத்தை நோக்கி செல்வதற்கான வாய்ப்பு உருவானது. இதன் எதிரொலியாக இன்று சிக்கிம் இயற்கை விவசாய மாநிலமாக உருவாகியுள்ளது.

**ஓசூர் உழவர் சந்தையில் ஒரே நாளில் ரூ.17 லட்சத்துக்கு காய்கறி விற்பனை**



ஒசூர் உழவர் சந்தையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விற்பனை ஜோராக நடைபெற்றபோது எடுத்த படம்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஓசூர் உழவர் சந்தையில் நேற்று ஒரே நாளில் ரூ.17 லட்சம் மதிப்புள்ள காய்கறிகள் விற்பனை ஆனது.

பொங்கல்பண்டிகை

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை இன்று (வெள்ளிக்கிழமை) உற்சாகமாக கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வீடுகளின் முன்பு பொங்கலிட்டு, சூரியபகவானுக்கு காய்கறிகள், பழங்கள் படைத்து, பூஜை செய்து வழிபடுவது வழக்கமாகும்.

இதை முன்னிட்டு நேற்று காய்கறிகள் விற்பனை ஜோராக நடைபெற்றது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் தாலுகா அலுவலக சாலையில் உழவர் சந்தை உள்ளது. இங்கு நேற்று காலை முதல் விற்பனை படுஜோராக நடைபெற்றது. காலை முதல் மாலை வரை உழவர் சந்தையில் 74 டன் காய்கறிகள் விற்பனை ஆனது. அதே போல 2½ டன் பழ வகைகளும், 300 கிலோ பூக்களும் விற்பனை ஆனது. காய்கறிகள் மட்டும் ரூ.17 லட்சத்திற்கும், பழங்கள் ரூ.1 லட்சத்திற்கும், பூக்கள் ரூ.50 ஆயிரத்திற்கும் என்று நேற்று ஒரே நாளில் ஓசூர் உழவர் சந்தையில் காய்கறிகள், பூக்கள், பழங்கள் ரூ.18½ லட்சம் விற்பனை ஆனது.

10 ஆயிரம் பேர் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 260 விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதை 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வாங்கி சென்றார்கள். குறிப்பாக பொங்கல் பானைக்கு கட்டப்படும் மஞ்சள், கரும்பு, பனைக்கிழங்கு போன்றவை விற்பனை படுஜோராக இருந்தது. அதே போல பொங்கல் பானைகளும் ஆங்காங்கே விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன.இதை பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கிச் சென்றார்கள். நேற்று மட்டும் ஓசூர் உழவர் சந்தையில் மொச்சை 3 டன் அளவிற்கும், சர்க்கரை வள்ளி கிழங்கு அரை டன் அளவிற்கும் விற்பனை ஆனது. இதே போல பூஜைக்காக பயன்படுத்தப்படும் சாமந்தி, செண்டுமல்லி பூக்களும் அதிக அளவில் விற்பனை ஆனது.

கேரட் விலை குறைந்தது கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை ஓசூர் உழவர் சந்தையில் ஒரு கிலோ கேரட் ரூ.70-க்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று விலை குறைந்து ஒரு கிலோ கேரட் ரூ.50-க்கு விற்பனை செய்யப்பட்டது. ஓசூர் உழவர் சந்தையில் நேற்று அதிக

அளவில் கூட்டம் வந்ததின் காரணமாக அந்த பகுதியில் கடுமையாக போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் இரு சக்கர வாகனத்தில் சென்ற பலரும் அந்த சாலையை கடக்க நீண்ட நேரம் ஆனது.

**சாத்தியாறு அணை பாசனத்திற்காக திறப்பு**



சாத்தியாறு அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

தண்ணீர்திறப்பு

பாலமேடு அருகே சாத்தியாறு அணை உள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த வடகிழக்கு பருவ மழையினால் அணைக்கு நீர் வரத்து ஏற்பட்டு 26 அடியை எட்டியது. தண்ணீரின் இருப்பை அனுசரித்து விவசாயத்திற்கு திறந்துவிடவேண்டி விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்திற்கும், அரசுக்கும் கோரிக்கை விடுத்தனர்.

இதையொட்டி அணை திறந்துவிட முடிவு செய்யப்பட்டது. அதன்படி சாத்தியாறு அணை திறக்கப்பட்டு வினாடிக்கு 20 கன அடி தண்ணீர் மட்டும் திறந்துவிடப்பட்டுள்ளது. அணைக்கு நீர் வரத்து ஏதும் இல்லை. தற்போது உள்ள நிலவரப்படி 15 நாட்களுக்கு மட்டுமே இந்த தண்ணீர் விவசாயிகளுக்காக முறை வைத்து வழங்கப்படுகிறது.

1500 ஏக்கர் பாசன வசதி தண்ணீர் திறப்பின்போது உதவிசெயற் பொறியாளர் ஜோதிபாஸ், சர்க்கரைஆலை சேர்மன் ராம்குமார், உதவி பொறியாளர் விஜயகுமார், கூட்டுறவு வங்கி தலைவர்கள் அழகுராஜா, சோலைமலை, இப்பகுதி பாசன விவசாயிகள் செந்தில், செல்வராஜ், நடராஜன், அழகர்சாமி, தனுஸ்கோடி, சேதுசீனிவாசன், அய்யங்காளை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்த அணையினால் கீழச்சின்னணம்பட்டி, எர்ரம்பட்டி, அய்யூர், முடுவார்பட்டி, கோவில்பட்டி உள்ளிட்ட 10 கிராம கண்மாய்கள் மூலம் சுமார் 1500 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. இந்த அணையின் நீர்மட்ட கொள்ளளவு 29 அடியாகும்.

**மாட்டுப்பொங்கலையொட்டி, உழவர் சந்தைகளில் ரூ.85 லட்சத்து 95 ஆயிரத்துக்கு காய்கறிகள் விற்பனை ஆனது**



சேலம்

சேலம் மாவட்டத்தில் அம்மாபேட்டை, அஸ்தம்பட்டி, சூரமங்கலம், தாதகாப்பட்டி, ஆட்டையாம்பட்டி, ஆத்தூர், மேட்டூர், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், இளம்பிள்ளை, இடைப்பாடி உள்ளிட்ட 11 இடங்களில் உழவர்சந்தைகள் உள்ளன. நேற்று மாட்டுபொங்கல் விழாவையொட்டி பெரும்பாலானோர் பொங்கல் வைத்து படையல்யிடுவதற்காக உழவர் சந்தைகளில் காய்கறிகளை அதிகளவில் வாங்கிச் சென்றனர்.

11 உழவர் சந்தைகளிலும் 1,241 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 269 டன் 72 கிலோ காய்கறிகள் ரூ.85 லட்சத்து 95 ஆயிரத்து 263–க்கு விற்பனையானது. இக்காய்கறிகளை 56 ஆயிரம் நுகர்வோர்கள் வாங்கிச் சென்றனர். வழக்கமாக அமாவாசை நாட்களில் 200 முதல் 210 டன் காய்கறிகள் விற்பனையாகும். அனால் நேற்று மாட்டுபொங்கல், பொங்கலுக்கு படைப்பு இடுவதையொட்டி 60 டன் காய்கறிகள்

கூடுதலாக விற்பனை ஆகி உள்ளது என உழவர்சந்தை கண்காணிப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

**நெல்லையில் பொங்கலையொட்டி பூக்கள் விலை ‘கிடுகிடு’ உயர்வு ஒரு கிலோ மல்லிகை ரூ.2 ஆயிரத்துக்கு விற்பனை**



பொங்கல் பண்டிகையையொட்டி நெல்லையில் பூக்கள் விலை ‘கிடுகிடு‘வென உயர்ந்தது. ஒரு கிலோ மல்லிகைப்பூ விலை ரூ.2 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. பொங்கல்பண்டிகை

நெல்லை சந்திப்பு கெட்வெல் ஆஞ்சநேயர் கோவில் அருகே பூ மார்க்கெட் செயல்படுகிறது. சங்கரன்கோவில், சுரண்டை, செட்டிக்குறிச்சி உள்ளிட்ட பல பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் பூக்கள், அந்த மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இது தவிர ஓசூர், ராயக்கோட்டை உள்ளிட்ட வெளியூர்களில் இருந்தும் கேந்தி பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.
வழக்கமாகவே பண்டிகை காலங்களில் பூக்கள் விலை உயர்ந்து

இருக்கும். பொங்கல் பண்டிகை இன்று (வெள்ளிக்கிழமை) கொண்டாடப்படுவதால், வழக்கத்தை விட பூக்கள் விலை நேற்று ‘கிடுகிடு‘வென உயர்ந்து இருந்தது. ஆனாலும், நெல்லை பூ மார்க்கெட்டில், பூக்கள் வாங்க கூட்டம் அலைமோதியது.

1 கிலோ ரூ.2 ஆயிரம் ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.2 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டது. பொதுவாகவே மார்கழி மாதத்தில் மல்லிகை பூக்கள் உற்பத்தி குறையும். அதனால் விலை அதிகரிக்கும்.

உற்பத்தி குறைந்த காலத்தில் பொங்கல் பண்டிகை வருவதால் வழக்கத்தை விட, விலை உயர்ந்துவிட்டது.

நெல்லை பூ மார்க்கெட்டில் நேற்றைய விலை விவரம் வருமாறு:-

ஒரு கிலோ பிச்சிப்பூ ரூ.1,750, கனகாம்பரம்- ரூ.1,400, அரளிப்பூ- ரூ.300, செவ்வந்திப்பூ- ரூ.150, வெள்ளை செவ்வந்திப்பூ- ரூ.200, சம்பங்கிப்பூ- ரூ.150, பெங்களூர் கேந்திப்பூ- ரூ.70, உள்ளூர் கேந்திப்பூ- 50, கோழிக்கொண்டைப்பூ- ரூ.100-க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஒரு தாமரை பூவின் விலை ஒரு ரூபாய்க்கு விற்பனையானது.

**திருப்பூர் மீன் மார்க்கெட்டில் வரத்து குறைந்ததால் விலை கிடுகிடு உயர்வு**



திருப்பூர்

திருப்பூர் மீன் மார்க்கெட்டுக்கு தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய 4 மாநிலங்களில் இருந்து மீன்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. அந்த வகையில் நேற்று தமிழ்நாட்டில் இருந்து 5 டன், கேரளாவில் இருந்து 10 டன், கர்நாடகாவில் இருந்து 10 டன், ஆந்திராவில் இருந்து 25 டன் என்று மொத்தம் 50 டன் மீன்கள் விற்பனைக்காக வந்திருந்தது. ஒவ்வொரு வாரம் ஞாயிற்றுக்கிழமையும் 60 டன்கள் வரை மீன் விற்பனைக்கு வருவது வழக்கம்.

ஆனால் நேற்று மீன்வரத்து வழக்கத்தைவிட 10 டன் குறைந்து இருந்ததால் அனைத்து மீன்களின் விலையும் கிடுகிடுவென உயர்ந்து இருந்தது. கடந்த வாரம் ரூ.250 விற்கப்பட்ட 1 கிலோ படையப்பா, பாரை, கலிங்கமுரல், சின்னபாரை ஆகியவை நேற்று ரூ.300–க்கும்,

ரூ.300–க்கு விற்பனை செய்யப்பட்ட விலமீன் ரூ.350–க்கும், ரூ.150–க்கு விற்கப்பட்ட ஏட்டை ரூ.180–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

அதேபோல, ரூ.500–க்கு விற்கப்பட்ட வஞ்சிரம் ரூ.550–க்கும், ரூ.600–க்கு விற்கப்பட்ட வாவல் ரூ.650–க்கும், ரூ.200–க்கு விற்கப்பட்ட ஆலமுரல் ரூ.250–க்கும், ரூ.250–க்கு விற்கப்பட்ட ஊழி, கிளாத்தி ரூ.300–க்கும், ரூ.180–க்கு விற்கப்பட்ட அயிலை ரூ.200–க்கும், ரூ.80–க்கு விற்கப்பட்ட நெய்மீன் ரூ.100–க்கும், ரூ.300–க்கு விற்கப்பட்ட நண்டு ரூ.350–க்கும் விற்பனை செய்யப்பட்டது. அனைத்து மீன்களின் வரத்தும் குறைவாக இருந்ததால் விலை அதிகமாக இருந்தது. இதனால் எதிர்பார்த்த அளவு மீன் விற்பனை இல்லை என்று மீன் மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.